# தமிழ்நாட்டில் அனைத்து விளையாட்டுகளிலும் தோனியைப் போன்றவர்களை உருவாக்க நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த ஆண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை மானியக் கோரிக்கையில் பல மகத்தான அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றை நீங்களும் அறிவீர்கள்.

★ சென்னையில் Squash விளையாட்டுக்கான உலகக்கோப்பைப் போட்டிகள், ஆசிய ஹாக்கி ஆடவர் சாம்பியன்ஷிப், ATP சென்னை ஓபன் டூர் போன்ற உலகப் போட்டிகளை நடத்துதல் ஆகிய இலக்குகளை உருவாக்கிக் கொண்டு செயல்பட்டு வருகிறார் நம்முடைய அமைச்சர் உதயநிதி அவர்கள்.

இந்த வரிசையில் மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காகப் பொதுமக்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து 'Tamil Nadu Champions Foundation' என்ற அறக்கட்டளையை உருவாக்குவதும் ஒரு முக்கிய அறிவிப்பு.

**விளையாட்டுகளுக்கு புத்துயிர் அளிக்கும் முன்னெடுப்பு!**

தமிழ்நாட்டில் விளையாட்டு களுக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கத்தில் மக்களுடனும் பெருநிறுவனங்களுடனும் இணைந்து செயல்படுவதற்கான ஒரு முன்னெடுப்பாக இது அமைந்துள்ளது.

நிறுவனங்களும் இதர அமைப்புகளும் அளிக்கும் கூட்டாண்மைச் சமூகப்பொறுப்பு (CSR) நிதிகளை ஒன்று திரட்டி இதனைச் செய்யலாம். இதன் மூலமாக நம் மாநிலத்தின் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளைச் மேம்படுத்தலாம். விளையாட்டு வீரர்களின் தேவைகளை நிறைவு செய்யலாம்.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் இது போல தனியார் பங்களிப்பு செயல் திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. அதைப் போலவே விளையாட்டுத் துறையிலும் செயல்படுத்த தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை பயன்படும். இங்கே அமைச்சர் உதயநிதி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 'நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன்' தொடங்கியபோது, முதலமைச்சர் என்கிற முறையில் மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையில் நான் 5 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியதாக அவர் குறிப்பிட்டுச் சொன்னார். இங்கேயும் எதிர்பார்ப்பதாகச் சொன்னார். உங்கள் எதிர்பார்ப்பு வீண் போகாது. இந்த அமைப்பிற்கும் என்னுடைய தனிப்பட்ட முறையில் 5 இலட்சம் ரூபாயை நான் வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்து, இந்த அறக்கட்டளை நிதிகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும். குறிப்பிட்ட விளையாட்டுகளுக்கு, குறிப்பிட்ட சிலருக்குப் பயன்படுவதாக அமைந்துவிடக் கூடாது.

இந்த அறக்கட்டளை மூலமாக

★ அனைத்து விளையாட்டுகளும்

★ அனைத்து விளையாட்டு வீரர்களும்

★ அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் சம அளவில் பயன்பெற வேண்டும்.

மிக நல்ல நோக்கத்துக்காக தொடங்கப்பட்டுள்ள இந்த அறக்கட்டளை, அந்த நோக்கத்தை மிகச் சரியாக நிறைவேற்றிக் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**உலக அளவில் பரிசுகளை தொடர்ந்து குவித்திடுவீர்!**

இந்தத் துறை மேலும் சிறக்கவும் - ஏராளமான விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் - அகில இந்திய அளவில் மட்டுமல்லாமல், உலகளவில் நமது வீரர்கள் பரிசுகளை தொடர்ந்து குவிக்கவும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.05.2023) சென்னையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் 2023க்கான டி ஷர்ட் வெளியிட்டார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.

## தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையைத் தொடங்கி வைத்தார்!

# 'முதலமைச்சர் கோப்பை போட்டிகள், 2023' - இலச்சினை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, மே 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.05.2023) சென்னையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" - யை தொடங்கி வைத்து, "முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் 2023"-க்கான "வீரன்" சின்னம், கருப்பொருள் பாடல் மற்றும் டி-ஷர்ட் ஆகியவற்றை வெளியிட்டார். மேலும், "முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் 2023"-க்கான இலச்சினையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"-யின் இலச்சினை மற்றும் வலைதளத்தை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி அவர்களும் வெளியிட்டார்கள்.

**தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் பல்வேறு முன்னெடுப்பு களை மேற்கொண்டு தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக மாற்ற வேண்டும் என்ற லட்சியத்தோடு மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தவும், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விளையாட்டு சூழலை உருவாக்கிடவும், அரசிற்கும், பங்குதாரர்களுக்கும் இடையில் தடையற்ற ஒருங்கிணைப்பை அடைவதற்கும், பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து பெறக்கூடிய நன்மைகளைப் பயன்படுத்துவதற்கும், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" (Tamil Nadu Champions Foundation) என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" - யை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"-யின் இலச்சினை மற்றும் வலைதளத்தை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி வெளியிட்டார்.

விளையாட்டுத்துறை சிறப்பாக இயங்க நிதி ஆதாரம் என்பது மிக அவசியமான ஒன்றாகும். எனவே, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில் இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் உருவாக்கம், உறுப்பினர்கள் மற்றும் இயக்குநர் குழுவின் செயல்பாடுகள் ஆகியவை தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, பல்வேறு உயர் அலுவலர்களை இயக்குநர்களாக கொண்டதாகும். இந்த அறக்கட்டளையானது வருமான வரிச் சட்டம், 1961 இன் பிரிவு 12AA மற்றும் 80G இன் கீழ் வரி விலக்கு சான்று பெற்றுள்ளது.

நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகளை மதிப்பாய்வு செய்திடவும், நன்கொடையாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் முழுமையான நிதி வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை உருவாக்கும் வகையிலும் இந்த அறக்கட்டளை செயல்படும். இந்த அறக்கட்டளையின் நிர்வாக நடைமுறைகளை சிறப்பாக செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு முதற்கட்டமாக 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது.

**முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் - 2023**

44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் நிறைவு விழாவின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "நமது பாரம்பரிய விளையாட்டுகளான கபாடி மற்றும் சிலம்பம் விளையாட்டுகளுடன்

12 விளையாட்டுகளை உள்ளடக்கிய முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் நடைபெறும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

அதன்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற 14.12.2022 அன்றே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் 2022-23ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் தொன்மையான பாரம்பரிய விளையாட்டு களான கபாடி மற்றும் சிலம்பாட்டத்தினைச் சேர்த்திடவும், முந்தைய காலங்களில் ஒரே ஒரு பிரிவில் மட்டும் 10 விளையாட்டுகளில் நடத்தப்பட்ட மாநில போட்டிகளில் பாரம்பரிய விளையாட்டுக் களுடன் மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் என அனைவரையும் உள்ளடக்கிய 5 பிரிவுகளில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்திடவும், இப்போட்டிகளை சிறப்பாக நடத்திட மாநில அளவிலான ஒருங்கிணைப்புக்குழு, மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக் குழு மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்தும் குழு ஆகிய குழுக்களை அமைத்திட கோரும் கோப்பில் கையொப்பமிட்டார்.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் தற்போது நமது பாரம்பரிய விளையாட்டுகளான கபாடி மற்றும் சிலம்பம் விளை யாட்டுகள் உட்பட 15 விளையாட்டுப் போட்டிகள் அனைத்து வகையான விளை யாட்டு வீரர்களையும் இணைத்து நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் பள்ளி, கல்லூரி, பொதுப்பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட இருபாலருக்கும் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளை நடத்துவதற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நல ஒருங்கிணைப்புக் குழுவும் மற்றும் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நல அலுவலரை ஒருங்கிணைப்பாளராக கொண்ட மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவும், இப்போட்டிகளை சிறப்பாக நடத்திட அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் "முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் 2023"-க்கான "வீரன்" சின்னம், கருப்பொருள் பாடல் மற்றும் டி-ஷர்ட் ஆகியவற்றை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "முதலமைச்சர் கோப்பை போட்டிகள் 2023"-க்கான இலச்சினையை வெளியிட்டார்.

முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகள் மாவட்ட அளவில், மண்டல அளவில் மற்றும் மாநில அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நடத்தப்படுகிறது. 38 மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான போட்டிகளில் 3,71,351 பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பிப்ரவரி முதல் வாரத்தில் தொடங்கி மார்ச் மாதம் வரை நடைபெற்றது. அனைத்து விளையாட்டுப் பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. அனைத்து மாவட்டங்களிலும் வெற்றி பெறும் / தேர்வு செய்யப்படும் சிறந்த அணிகள் / வீரர்கள் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகள் முடிவுற்ற நிலையில், பள்ளி மற்றும் கல்லூரி தேர்வுகள் நடைபெற்று வருவதால் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்கள் 2023 மே மாதம் இரண்டாவது வாரத்தில் மாவட்ட அளவில் நடைபெறவுள்ள விழாக்களில் வழங்கப்படும்.

மாநில அளவிலான போட்டிகள் சென்னையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கங்களின் வசதிகளைப் பயன்படுத்தி 2023 ஜுன் மாதத்தில் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது. இம்மாபெரும் போட்டியில், பல்வேறு மாவட்டங்களில் இருந்து 27,000-க்கும் மேற்பட்ட முன்னணி விளையாட்டு வீரர்கள் பங்கேற் கின்றனர்.

மாநில அளவிலான போட்டியில், பதக்க நிலைக்கு ஏற்ப அதிக புள்ளிகள் பெறும் முதல் 3 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு முதலமைச்சர் கோப்பை வழங்கப்படும். முதலமைச்சர் கோப்பை போட்டிகளை நடத்திட தமிழ்நாடு அரசால் 50.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே. மோகன், த. வேலு, ஐட்ரீம் இரா. மூர்த்தி, டி.ஆர்.பி. ராஜா, இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கிருஷ்ணகிரி முன்னாள் கிழக்கு மாவட்ட செயலாளரும் மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினருமான இ.ஜி. சுகவனம் அவர்களின் தாயார் மணிமேகலை கோவிந்தராஜ் ( 89) 02.05.23 அன்று வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார். இதனையடுத்து பர்கூரில் உள்ள இ.ஜி.சுகவனம் இல்லத்துக்கு கழக அமைப்பு செயலாளர் ஆர் .எஸ்.பாரதி சென்று ஆறுதல் கூறினார். உடன் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ, மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர் பாலன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அறிஞர், பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன், பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷ்குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் டி.சி.ஆர்.எம் தினேஷ்குமார் இருந்தனர்.

## நாட்டின் பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சரின் சொந்த மாநிலமான

# குஜராத்தில் 40 ஆயிரம் பெண்களைக் காணவில்லை!

## தேசிய குற்ற ஆவணக் காப்பகம் அதிர்ச்சித் தகவல்!

**அகமதாபாத்,மே 9-**

**குஜராத்தில் 2016ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 40 ஆயிரம் பெண்களைக் காண வில்லை என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

குஜராத்தில் 2016ஆம் ஆண்டில் 7,105 பேர், 2017ஆம் ஆண்டில் 7,712 பேர், 2018ஆம் ஆண்டு 9,246 பேர் என மொத்தம் 24,063 பேர் காணாமல் போயுள்ளதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அதிகாரப் பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

தவிர 2019ஆம் ஆண்டு 9,268 பெண்கள், 2020ஆம் ஆண்டு 8,290 பெண்கள் காணாமல் போயுள்ளதாக 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' இணையதளம் குஜராத் மாநில நிலைமையை அம்பலப்படுத்தியுள்ளது.

தற்செயலாக, 2021 - ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் மாநில அரசு வெளியிட்ட அறிக்கையின்படி, அகமதாபாத் மற்றும் வதோதராவில் ஒரு வருடத்தில் (2019-20) 4,722 பெண்கள் காணாமல் போயுள்ளனர் எனவும் அந்த இணையதளம் கூறுகிறது.

முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரியும், குஜராத் மாநில மனித உரிமைகள் ஆணைய உறுப்பினருமான சுதிர் சின்ஹா,"காணாமல் போன சில வழக்குகளில், சிறுமிகள் மற்றும் பெண்கள் எப்போதாவது குஜராத்தைத் தவிர மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு விபச்சாரத்தில் தள்ளப்படுவதை நான் அவதானித்துள்ளேன்" என்கிறார்.

"காணாமல் போனவர்கள் தொடர்பான வழக்குகளை தீவிரமாகக் கையாளாததுதான் காவல் துறையின் பிரச்சினை.

இதுபோன்ற வழக்குகள் கொலையை விடத் தீவிரமானவை. ஏனென்றால், ஒரு குழந்தை காணாமல் போனால், பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்காக பல ஆண்டுகளாக காத்திருக்கிறார்கள், காணாமல் போன வழக்கை ஒரு கொலை வழக்கைப் போல கடுமையாக விசாரிக்க வேண்டும்" என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

முன்னாள் கூடுதல் காவல்துறை இயக்குநர் டாக்டர் ராஜன் பிரிய தர்ஷி கூறுகையில், "சிறுமிகள் காணாமல் போனதற்கு மனித கடத்தல் தான் காரணம். "எனது பதவிக் காலத்தில், காணாமல் போன பெண்களில் பெரும்பாலோர் சட்ட விரோத மனிதக் கடத்தல் குழுக்களால் அவர்கள் வேறு மாநிலத்திற்கு கொண்டு சென்று விற்பனை செய்வதை நான் அவதானித்தேன்".

"கேடா மாவட்டத்தில் நான் காவல் கண்காணிப்பாளராக இருந்தபோது, அந்த மாவட்டத்தில் கூலி வேலை செய்து கொண்டிருந்த உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், ஒரு ஏழைப் பெண்ணைத் தூக்கிச் சென்று, தனது சொந்த மாநிலத்தில் விற்று, வேலைக்குச் சேர்த்து, அங்கேயே பணிபுரிந்தார். நாங்கள் அந்தப் பெண்ணை மீட்க முடிந்தது, ஆனால் இது பல சந்தர்ப்பங்களில் நடக்காது" என்கிறார்.

குஜராத் காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஹிரேன் பேங்கர் கூறுகையில், "கேரளாவில் பெண்களைப் பற்றி பா.ஜ.க. தலைவர்கள் பேசுகிறார்கள். ஆனால், நாட்டின் பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சரின் சொந்த மாநிலமான குஜராத்தில் 40,000க்கும் மேற்பட்ட பெண்களைக் காணவில்லை" என்றார்.

## திண்டுக்கல்லில் பிளஸ் 2 தேர்வில் 600க்கு - 600 மதிப்பெண்கள் எடுத்து

# கூலித் தொழிலாளியின் மகள் நந்தினி சாதனை!

திண்டுக்கல்,மே 10-

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 600க்கு 600 மதிப்பெண்கள் பெற்று திண்டுக்கல் மாணவி ச.நந்தினி சாதனைப் படைத்துள்ளார்.

தமிழ்நாட்டில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன. இத்தேர்வில் 93.77 சதவிகித தேர்ச்சியுடன் திண்டுக்கல் மாவட்டம் 21ஆவது இடத்தை பிடித்தது. இம்மாவட்டத்திலுள்ள 12 அரசுப் பள்ளிகள் உள்பட 67



பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சியை பதிவு செய்துள்ளன.

இந்த நிலையில் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி நந்தினி, தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட 6 பாடங்களிலும் முழு மதிப்பெண்கள் வீதம் 600க்கு 600 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். திண்டுக்கல் நகால் நகரிலுள்ள அண்ணாமலையார் மில்ஸ் அரசு உதவி பெறும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவி நந்தினி, தமிழ், ஆங்கிலம், பொருளியல், வணிகவியல், கணக்கு பதிவியல், கணினி பயன்பாடு ஆகிய பாடங்களில் முழு மதிப்பெண் களைப் பெற்றுள்ளார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகர மேற்கு பகுதி ஜுஜுவாடி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.இதில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகர மேயர் எஸ்.ஏ.சத்யா, மேற்குப் பகுதி அவைத்தலைவர் டி.ஏ.கருணாநிதி, மாநகரத் துணை மேயர் சி.ஆனந்தய்யா, மாவட்ட அவைத் தலைவர் அ.யுவராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் புஷ்பா சர்வேஷ், மாவட்ட பொருளாளர் தா. சுகுமாரன் மற்றும் ஏராளமான பொதுமக்கள், கழகத்தினர் உடனிருந்தனர்.